**ஜனவரி – 19**

# TNPSC துளிகள்

- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் மூன்றாவது ஏவுதளத்தினை (TLP) நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை தன் ஒப்புதலை அளித்துள்ளது.
- அயர்லாந்து அணிக்கு எதிரான மூன்றாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் ஸ்மிருதி மந்தனா குறைந்த (70) பந்துகளில் சதம் அடித்து சாதனைப் படைத்துள்ளார்.
- இந்திய இராணுவம் மற்றும் இந்திய விமானப்படை ஆகியவை இணைந்து 'டெவில் ஸ்ட்ரைக்' என்ற கூட்டுப் பயிற்சியினை மேற்கொண்டன.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது, உலகிலேயே அதிகக் குதிரைத் திறன் (1200HP) கொண்ட ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இரயில் எஞ்சினை உருவாக்கியுள்ளது.
- இந்தியா மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் தங்களது கலாச்சாரம், சுற்றுலா மற்றும் செயற்கை நுண்ணறிவு ஒத்துழைப்புகளைக் கொண்டாடுவதற்காக வேண்டி 2026 ஆம் ஆண்டினை 'இரட்டை ஆண்டாக' அறிவித்துள்ளன.
- இந்திய கிராண்ட்மாஸ்டர் அர்ஜுன் எரிகைசி, Chess.com நடத்திய இயர்லி டைட்டில் தியூஸ்டே வீக்லி பிளிட்ஸ் போட்டியில் உலகின் முன்னணிச் சதுரங்க வீரர் மேக்னஸ் கார்ல்சன் மற்றும் உலகளவில் இரண்டாம் இடத்தில் உள்ள ஃபேபியானோ கருவானா ஆகியோரை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.
- பல்வேறு பதவித் தரவரிசைகளைச் சேர்ந்த 1,025 பணியாளர்களைக் கொண்ட இரண்டு புதிய படைப்பிரிவுகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள மத்தியத் தொழில்துறை பாதுகாப்புப் படையின் (CISF) ஒரு மாபெரும் விரிவாக்கத்திற்கு உள்துறை அமைச்சகம் (MHA) ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய இராணுவம் தனது 77வது இராணுவத் தினத்தை மகாராஷ்டிராவின் புனேவில் உள்ள பாம்பே இன்ஜினியர்ஸ் குரூப் மற்றும் சென்டர் அணிவகுப்பு மைதானத்தில் கொண்டாடியது.
  - டெல்லிக்குப் பதிலாக வேறொரு இடத்தில் இராணுவ தின அணிவகுப்பு நடத்தப் படுவது இது மூன்றாவது முறையாகும்.
- சர்ச்சைக்குரிய குறுகிய காலப் பங்கு விற்பனை நடைமுறைகளை வெளிக்கொண்டு வந்த அமெரிக்க நாட்டின் ஹிண்டன்பர்க் நிறுவனமானது அதன் செயல்பாடுகளை நிறுத்த முடிவு செய்துள்ளது.


# தமிழ்நாடு செய்திகள்

## அருந்ததியர்களின் சிறப்பு இட ஒதுக்கீட்டு சலுகைகள்

- 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு அருந்ததியர் இட ஒதுக்கீட்டுச் சட்டமானது பட்டியலிடப் பட்ட சாதியினரிடையே (SCs) அருந்ததியர்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது.
- இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக அரசியலமைப்பின் 341வது சரத்தின் கீழ் இந்தியக் குடியரசுத் தலைவரால் அறிவிக்கப்பட்ட 76 பட்டியலிடப்பட்டச் சாதியினர் பட்டியலில் உள்ள அருந்ததியர், சக்கிலியன், மதரி, மடிகா, பகடி, தோட்டி மற்றும் ஆதி ஆந்திரா ஆகிய ஏழு சாதிகள் பொதுவாக அருந்ததியர்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- இது பட்டியலிடப்பட்டச் சாதியினருக்கான 18% ஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கு 3%


இட ஒதுக்கீடு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2018-19 மற்றும் 2023-24 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் MBBS படிப்பில் இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை சுமார் 82% அதிகரித்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டில் இருந்து இளங்கலை பல் அறுவை சிகிச்சை (BDS) படிப்பில் இந்த எண்ணிக்கை ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு 3% ஆக உயர்ந்துள்ளது.
- 2009-10 ஆம் ஆண்டில் பொறியியல் படிப்புகளின் சேர்க்கையில் 1,193 ஆக இருந்த பட்டியலிடப் பட்ட சாதியினர் - அருந்ததியர் (SC (A)) மாணவர்களின் எண்ணிக்கை 2023-24 ஆம் ஆண்டில் 3,944 ஆக அதிகரித்துள்ளது.




# தேசியச் செய்திகள்

## தேசிய அத்தியாவசிய நோயறிதல் பட்டியல் (NEDL) 2025





- தேசிய அத்தியாவசிய நோயறிதல் பட்டியலின் (NEDL) ஒரு திருத்தப்பட்டப் பதிப்பினை இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) முன்மொழிந்துள்ளது.
- நாட்டில் உள்ள பல்வேறு நிலையிலான சுகாதார மையங்களில் கிடைக்க வேண்டிய குறைந்தபட்சச் சோதனைகளின் எண்ணிக்கையை இது கணக்கிடுகிறது.
- இத்திருத்தப்பட்ட பதிப்பின் படி, நீரிழிவு நோய், மலேரியா, காசநோய், எச்.ஐ.வி மற்றும் சிபிலிஸ் உள்ளிட்ட ஒன்பது வகையான நோயறிதல் சோதனைகள் ஆனது கிராம

அளவிலான சுகாதாரக் கட்டமைப்புகளில் உள்ள சுகாதார மையங்களில் கிடைக்கச் செய்யப்பட வேண்டும்.


- நோயறிதல்களைச் சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பின் ஓர் அத்தியாவசிய அங்கமாக மாற்றுவதற்காக ICMR ஆனது 2019 ஆம் ஆண்டில் முதல் NEDL பட்டியலை வெளியிட்டது.

## மண உறவு உரிமைகள் குறித்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு




- மண உறவு உரிமைகள் மீட்பு மற்றும் பராமரிப்பு உரிமை தொடர்பான வழக்குகள் "முற்றிலும் சுயாதீனமானவை" மற்றும் "நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பற்றவை" என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- மேலும், மண உறவு உரிமைகளை மீட்டெடுப்பதற்கான ஒரு ஆணையை எந்த ஒருவர் பின்பற்ற மறுத்தாலும், கணவர் தனது மனைவிக்கு தொடர்ந்து அவரின் பராமரிப்புத் தொகையை வழங்க வேண்டும்.
- 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் (HMA) 9வது பிரிவானது, மண உறவு உரிமைகளை மீட்டெடுப்பது பற்றிக் கூறுகிறது.

## 8வது ஊதியக் குழு




- மத்திய அரசாங்கத்தில் பணி புரியும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் அரசு ஓய்வூதிய

தாரர்களின் கொடுப்பனவுகளைத் திருத்தியமைப்பதற்காக 8வது ஊதியக் குழுவினை அமைக்க மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

- 7வது ஊதியக் குழுவானது 2016 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஒரு நிலையில் அதன் செயல்பாட்டுக் காலம் 2026 ஆம் ஆண்டில் முடிவடைய உள்ளது.
- 1947 ஆம் ஆண்டு முதல், ஏழு மத்திய ஊதியக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் சம்பளத்தில் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக வேண்டி 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய ஊதியக் குழு அமைக்கப் படுகிறது.

## PMKSY திட்டத்தின் நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2.0




- ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் (MoRD) நில வளத் துறை (DoLR) ஆனது பிரதான் மந்திரி கிருஷி சிஞ்சாயி யோஜனா (WDC-PMKSY) திட்டத்தின் நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை அமல்படுத்துகிறது.
- ஒருங்கிணைந்த அணுகுமுறையில் நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம், நாட்டின் தரமிழந்த மற்றும் மழைநீர் பிடிப்பு/மானாவாரி பகுதிகளை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- PMKSY-WDC 2.0 திட்டத்தின் கீழ், சிறப்பாகச் செயல்படும் 10 மாநிலங்களில் 700 கோடி ரூபாய் செலவில் 56 புதிய நீர்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு உள்ளன.
- இதில் இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், கர்நாடகா, ஒடிசா, தமிழ்நாடு, அசாம், நாகாலாந்து, இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்கள் அடங்கும்.

## தூய்மையான கழிப்பறைகளுக்கான அணுகலை எளிதாக்குதல்

- அனைவரும் தூய்மையான பொது கழிப்பறைகளை மிக எளிதாக அணுகுவது என்பது வசதி சார்ந்த விவகாரம் மட்டுமல்ல, அது ஒரு அடிப்படை உரிமை மற்றும் மனித கண்ணியத்தின் இன்றியமையாத பகுதியாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இது அனைத்து ஆண்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநர்களுக்கும் பொருந்தும்.
- முறையான சுகாதாரத்திற்கான அணுகல் என்பது அரசியலமைப்பின் 21வது சரத்தின்

கீழ் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.




## சர்வதேசச் செய்திகள்

### நெகிழிக் கழிவு இறக்குமதிக்கு தடை – தாய்லாந்து




- நெகிழிக் கழிவுகளை இறக்குமதி செய்வதைத் தடை செய்வதன் மூலம் உலகளாவிய நெகிழிக் கழிவு நெருக்கடியை எதிர்கொள்ளும் சமீபத்திய நாடாக தாய்லாந்து மாறி உள்ளது.
- 2018 ஆம் ஆண்டிலிருந்து, அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு மற்றும் ஜப்பான் போன்ற பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து இந்த நெகிழிக் கழிவுகளை இறக்குமதி செய்யும் முன்னணி நாடாக தாய்லாந்து உள்ளது.
- 2018 மற்றும் 2021 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு இடையில், அந்நாடு 1.1 மில்லியன் டன்களுக்கும் அதிகமான நெகிழிக் கழிவுகளை இறக்குமதி செய்தது.
- 2023 ஆம் ஆண்டில், ஜப்பான் மட்டும் சுமார் 50 மில்லியன் கிலோகிராம் (50,000 டன்)

நெகிழிக் கழிவுகளைத் தாய்லாந்திற்கு ஏற்றுமதி செய்தது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## அணு ஆயுதம் இல்லாத எதிர்காலத்திற்கான விருதுகள் 2025

- அணுசக்தி இல்லாத உலகத்தை நோக்கிய தனது முயற்சிகளுக்காக என்று அணு ஆயுத எதிர்ப்புப் பிரிவில் 2025 ஆம் ஆண்டு அணு ஆயுதம் இல்லாத ஒரு எதிர்காலத்திற்கான விருதிற்கு P. உதயகுமார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அவர் கூடங்குளம் அணுசக்தி நிலையத்திற்கு எதிரான மக்கள் போராளி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளராக இருந்தார்.
- விருது பெற்ற மற்றவர்கள்
    - பிரேசில் நாட்டைச் சேர்ந்த மார்சியா கோம்ஸ் டி ஒலிவேரா மற்றும் நோர்பர்ட் சுச்சானெக்.
    - தி சொல்யூஷன் விருது ஆனது ஜிம்பாப்வேயைச் சேர்ந்த எட்விக் மாட்ஸிமுரேவுக்கு வழங்கப்பட உள்ளது.
    - கௌரவ வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் ஆனது அணுசக்தி எதிர்ப்பு ஆர்வலர் ஜோனா மேசி மற்றும் மறைந்த க்ளீ பெனாலி ஆகியோருக்கு வழங்கப்பட உள்ளது.
- இந்த விருதுகள் ஆனது 1998 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் கிளாஸ் பீகெர்ட்டால் நிறுவப் பட்டது.
- இந்த விருதுகள் அணு ஆயுதங்கள், அணுசக்தி மற்றும் யுரேனிய சுரங்கத்தை உலகில் இருந்து ஒழிக்க போராடுபவர்களைக் கௌரவிக்கின்றன.

## யூன் சுக்-யியோல் கைது

- பதவி நீக்கம் செய்யப்பட்ட தென் கொரிய அதிபர் யூன் சுக் யியோல் சமீபத்தில் கைது செய்யப்பட்டார்.
- அந்நாட்டின் வரலாற்றில் ஓர் அதிபர் தடுப்புக் காவலில் வைக்கப்படுவது இதுவே முதல்

முறையாகும்.

- டிசம்பர் 03 ஆம் தேதியன்று குறுகிய கால இராணுவச் சட்டத்தினை விதித்ததற்காக அவர் மீது கிளர்ச்சியினைத் தூண்டியது தொடர்பான பல குற்றச்சாட்டுகள் வைக்கப் பட்டது.



# இதரச் செய்திகள்

## இந்தியாவின் போர்க்களச் சுற்றுலா





- பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஆனது 'பாரத் ரன்பூமி தரிசனம்' எனப்படும் தனது ஒரு புதிய முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, அதன் வரலாற்று மற்றும் பயன்பாட்டில் உள்ள சில போர்க்களங்கள் மற்றும் புவிசார் அரசியல் சூழல் மண்டலங்களுக்குச் சுற்றுலாப் பார்வையாளர்கள் வருகை தருவதற்கு அனுமதியளித்துள்ளது.
- இந்த முக்கிய முன்னெடுப்பானது அதன் சிறப்பு மிக்க மற்றும் அணுக முடியாத போர் மண்டலங்களுள் சிலவற்றைச் சுற்றுலாத் தலங்களாக மாற்ற உள்ளது.
- புதிதாகத் தொடங்கப்பட்ட 'பாரத் ரன்பூமி தரிசனம்' முன்னெடுப்பில் கல்வான் மற்றும் டோக்லாம் மற்றும் கடந்த காலங்களில் சில இராணுவ நடவடிக்கைகள் நிகழ்ந்த 75 பிற

தளங்கள் அடங்கும்.

- இந்திய இராணுவமானது சுற்றுலாத் துறை அமைச்சகத்துடன் இணைந்து "போர்க்கள சுற்றுலாவிற்காக" இந்த போர்க்களத் தளங்களைப் பட்டியலிட்டுள்ளன.

## இந்தியாவின் உடல் பருமன் குறித்த வழிகாட்டுதல்கள்

- 15 ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டின் தனித்துவமான சுகாதாரச் சவால்களை நிவர்த்தி செய்வதற்காக வேண்டி இந்தியா இறுதியாக புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இதுவரையில், இந்தியா உடல் பருமன் மதிப்பீட்டிற்கான முதன்மை அளவீடாக உடல் நிறைக் குறியீட்டை (BMI) சார்ந்திருந்தது.
- திருத்தப்பட்ட இக்கட்டமைப்பு ஆனது உடல் பருமன் கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்கு மிகவும் விரிவான அணுகுமுறையை வழங்குகிறது.
- இந்தியர்களிடையே உடல் பருமன் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல உடல்நல அபாயங்களைச் சமாளிப்பதற்கு ஒரு தனிப்பயனாக்கப்பட்ட உத்தியின் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.
- உடல் பருமனுக்கான இரண்டு-நிலை வகைப்பாடானது முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை உடல் பருமன் என பிரிக்கப்பட்டுள்ளது.
  - முதலாவது நிலை உடல் பருமன் என்பது உறுப்புச் செயல்பாடு அல்லது அன்றாட நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதுவும் இல்லாமல் அதிகரித்த உடல் கொழுப்பாகக் குறிப்பிடப்படுகிறது (BMI > 23 kg/m²).
  - இரண்டாம் நிலை உடல் பருமன் என்பது வயிற்றுக் கொழுப்பு, அதிக அளவு இடுப்பு சுற்றளவு மற்றும் உறுப்பு சேதம் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் தீவிர நிலை உடல் பருமன் என்று குறிப்பிடப்படுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★